# தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் பங்களிப்பு!

**வேலைவாய்ப்பு: இளைஞர்களின் எதிர்காலத்தோடு இணைந்த சமூகநீதிக் கொள்கை**

ஒரு நாட்டின் வளர்ச்சியை அதன் பொருளாதார வளர்ச்சி விகிதத்தால் மட்டும் அளவிட முடியாது. அந்த நாட்டின் இளைஞர்களுக்கு எத்தகைய கல்வி கிடைக்கிறது, அவர்களுக்கு எத்தகைய திறன்கள் வழங்கப்படுகின்றன, அவர்கள் படித்த கல்விக்கேற்ற வேலைவாய்ப்பு கிடைக்கிறதா என்பதிலும் வளர்ச்சியின் தரம் வெளிப்படுகிறது.தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு என்பது வெறும் அரசு வேலைக்கான கேள்வியாக அல்லாமல், கல்வி, திறன், தொழில் வளர்ச்சி, முதலீடு மற்றும் சமூக நீதியுடன் இணைந்த கொள்கைப் பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு இந்த அணுகுமுறையை பல்வேறு திட்டங்கள் மற்றும் தொழில் முதலீட்டு நடவடிக்கைகளுடன் இணைத்துள்ளது. 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ”நான் முதல்வன் திட்டம் கல்வி மற்றும் தொழில்துறைத் தேவைகளுக்கு இடையிலான இடைவெளியை குறைப்பதை தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது (Government of Tamil Nadu, 2022).

இதனால் வேலைவாய்ப்பைப் பற்றிய விவாதத்தில் ”எத்தனை அரசு வேலைகள்? என்ற ஒரே கேள்வியைத் தாண்டி, ”எத்தனை புதிய வேலைவாய்ப்புகளுக்கான சூழல் உருவாக்கப்பட்டது?, ”இளைஞர்கள் வேலைக்குத் தேவையான திறன்களைப் பெற்றார்களா?, ”தொழில் முதலீடுகள் எவ்வாறு வேலைவாய்ப்பாக மாறுகின்றன? என்ற கேள்விகளையும் எழுப்ப வேண்டியுள்ளது.

இந்த விரிவான அணுகுமுறையில்தான் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் வேலைவாய்ப்புப் பங்களிப்பை மதிப்பிட வேண்டும்.

**அரசு வேலைவாய்ப்பில் தி.மு.க. அரசின் பங்களிப்பு!**

தமிழ்நாட்டில் அரசு வேலை என்பது பல குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தையும் சமூகப் பாதுகாப்பையும் வழங்கும் முக்கிய வாய்ப்பாக உள்ளது. எனவே காலிப்பணியிடங்களை கண்டறிந்து, தேர்வு மற்றும் நியமனச் செயல்முறைகளை நிறைவு செய்வது அரசின் அடிப்படைப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

ஒரு அரசின் சாதனையை வெறும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையால் மட்டுமே அளவிட முடியாது. ஒரு குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை குறைப்பதும், பெண்களின் கைகளில் நேரடியாக வருமானத்தைச் சேர்ப்பதும், மாணவர்களின் கல்வித் தொடர்ச்சியை உறுதி செய்வதும், மக்களின் அன்றாடச் செலவுகளை கட்டுப்படுத்துவதும் கூட சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான முக்கியமான அடையாளங்களாகும். அந்த வகையில், மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்திய பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள், நேரடியாக வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை என்றாலும், வேலை செய்வதற்கான வாய்ப்பையும், வருமானத்தைப் பாதுகாப்பதற்கான சூழலையும், குடும்பங்களின் பொருளாதாரத் தன்னிறைவையும் வலுப்படுத்துகின்றன.

குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் பெண்களின் கைகளில் நேரடியாகத் தொகையைச் சேர்ப்பதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தில் அவர்களின் முடிவெடுக்கும் பங்களிப்பை வலுப்படுத்துகிறது. மகளிர் இலவசப் பேருந்துப் பயணத் திட்டம், வேலைக்குச் செல்லும் பெண்கள், மாணவிகள் மற்றும் அன்றாடப் பயணத்தைச் சார்ந்துள்ள பெண்களின் போக்குவரத்துச் செலவைக் குறைப்பதுடன், அவர்களின் கல்வி, வேலை மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளுக்கான இயக்கவாய்ப்பையும் விரிவுபடுத்துகிறது.

அதேபோல், புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம், இன்றைய நலத்திட்டத்தை நாளைய மனிதவள முதலீடாக மாற்றுகின்றன. கல்வியைத் தொடரும் வாய்ப்பு அதிகரிப்பது, எதிர்காலத்தில் திறன் பெற்ற இளைஞர்களாகவும், சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடியவர்களாகவும் அவர்கள் உருவாகும் அடித்தளத்தை அமைக்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள், சுகாதாரச் சேவையை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு செல்வதன் மூலம், மருத்துவச் செலவு மற்றும் சிகிச்சைக்காக செலவிட வேண்டிய நேரம் போன்ற மறைமுகப் பொருளாதாரச் சுமைகளையும் குறைக்கின்றன.

எனவே, இந்தத் திட்டங்களை வெறும் ”இலவசத் திட்டங்கள் என்ற குறுகிய பார்வையில் அணுகாமல், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம், குடும்பங்களின் செலவுச் சுமை குறைப்பு, மாணவர்களின் கல்வித் தொடர்ச்சி, மனிதவள மேம்பாடு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் விரிவான சமூகநீதி நடவடிக்கைகளாகப் பார்க்க வேண்டும்.

அரசுப் பணியிடங்களில் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு என்பது ஒரு பக்கம் என்றால், அந்த வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர்களையும், வேலைக்குச் செல்லும் பெண்களையும், கல்வியைத் தொடரும் மாணவர்களையும், அன்றாட வாழ்வாதாரத்தைச் சுமக்கும் குடும்பங்களையும் வலுப்படுத்தும் இந்தத் திட்டங்கள் அதன் மறுபக்கமாகின்றன. ஒரு ஆட்சியின் பொருளாதாரப் பங்களிப்பை மதிப்பிடும்போது, ”எத்தனை வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன? என்பதுடன், ”எத்தனை பேரின் பொருளாதார வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டன? என்ற கேள்வியையும் இணைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, திட்டங்களால் பயனடைந்த பயனாளிகள் என்பதை விட திட்டங்களால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் என்று சொல்வது பொருத்தமாக அமையும். அந்த வகையில் பல லட்சக்கணக்கானோர் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர் என்பதை ஆணித்தரமாக சொல்ல முடியும்.

**முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் முதலீடு - வேலைவாய்ப்பு இணைப்பு!**

வேலைவாய்ப்பை உருவாக்குவதில் அரசு வேலைகளுக்கு அப்பாற்பட்ட மிகப்பெரிய தளம் தொழில் முதலீடுகளாகும். புதிய தொழிற்சாலை உருவாகும்போது நேரடி வேலைவாய்ப்புடன், அதனைச் சுற்றியுள்ள துணைத் தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளிலும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

முன்னாள் முதலமைசசர் மு.க. ஸ்டாலின் ஆட்சியில் முதலீடுகளை ஈர்ப்பது வேலைவாய்ப்பு உருவாக்கத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. 2023–2024 நிதிநிலை அறிக்கையில், மே 2021 முதல் 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2,70,020 கோடி முதலீட்டு உறுதிமொழிகளும் 3,89,651 பேருக்கான வேலைவாய்ப்பு வாய்ப்புகளும் குறிப்பிடப்பட்டன (Government of Tamil Nadu, 2023).இதன் தொடர்ச்சியாக 2024 ஜனவரி மாதம் நடைபெற்ற தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, ரூ.6,64,180 கோடி முதலீட்டு உறுதிமொழிகளுடன் 14,54,712 நேரடி வேலைவாய்ப்புகளும், மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளும் உருவாகும் என அரசு தெரிவித்தது (Government of Tamil Nadu, 2024a).

இந்த மாநாட்டில் மேம்பட்ட மின்னணு உற்பத்தி, பசுமை ஆற்றல், காலணி உற்பத்தி, மோட்டார் வாகனங்கள், மின்சார வாகனங்கள், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, தரவு மையங்கள், உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல துறைகள் இடம்பெற்றன (Government of Tamil Nadu, 2024a). இதனால் மு.க. ஸ்டாலினின் முதலீட்டு அணுகுமுறை தற்போதைய வேலைவாய்ப்பை மட்டுமல்லாமல், எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கான தொழில் அடித்தளத்தையும் நோக்குகிறது என்று கூற முடியும்.

**“நான் முதல்வன்”: மு.க. ஸ்டாலின் முன்வைத்த திறன்-வேலைவாய்ப்பு பாலம்!**

2022 மார்ச் 1 அன்று மு.க. ஸ்டாலினால் தொடங்கப்பட்ட ”நான் முதல்வன் திட்டம், கல்விக்கும் தொழில்துறையின் தேவைக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. தொழில்துறை சார்ந்த பாடங்கள், தொழில் வழிகாட்டுதல், mentorship, internship மற்றும் placement support ஆகியவை இதன் முக்கிய கூறுகளாக உள்ளன (Government of Tamil Nadu, 2022).

இத்திட்டத்தின் தற்போதைய அதிகாரப்பூர்வ தளம் Arts and Science, Engineering, Polytechnic, ITI, Pharmacy and Medical Sciences உள்ளிட்ட பல பிரிவுகளுக்கான திறன் பயிற்சிகளை வழங்குவதாகவும், internship, apprenticeship, hackathon மற்றும் placement வாய்ப்புகளுடன் தொழில்துறையுடன் இணைப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடுகிறது (Tamil Nadu Skill Development Corporation, 2026a).

மேலும், TNSkill Registry மூலம் 17.56 லட்சத்திற்கும் மேற்பட்ட திறன் பெற்ற நபர்களின் தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வத் தளம் தெரிவிக்கிறது. தொழில் நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு தளங்கள் திறன் பெற்றவர்களை அணுகும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (Tamil Nadu Skill Development Corporation, 2026b).



**முனைவர் செ. குறிஞ்சிவாணன்**
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

இதன் மூலம் ”படித்து முடித்த பிறகு வேலை தேடு என்ற பழைய அணுகுமுறையிலிருந்து ”படிக்கும் போதே வேலைக்குத் தேவையான திறனைப் பெறு என்ற புதிய அணுகுமுறைக்கு அரசு நகர்ந்தது . இளைஞர்களின் employabilityயை உயர்த்தும் இந்த முயற்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தலைமையிலான திறன் மேம்பாட்டு கொள்கைக்கு முக்கிய இடம் உள்ளது.

**பெண்களின் பொருளாதார முன்னேற்றமும் வேலைவாய்ப்பும்**

வேலைவாய்ப்பை சமூகநீதியுடன் இணைத்துப் பார்க்கும்போது பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பு முக்கியமான அளவுகோலாகிறது. பெண்களுக்கு கல்வி, திறன், தொழில் மற்றும் வருமானம் உருவாக்கும் வாய்ப்புகள் கிடைப்பது ஒரு குடும்பத்தின் பொருளாதார நிலையை மட்டுமல்ல, மாநிலத்தின் மொத்த உற்பத்தித் திறனையும் உயர்த்துகிறது. மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரத் திட்டங்களை வேலைவாய்ப்பு நோக்கில் பார்க்கும் போது, பெண்கள் கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புகளில் தொடர்ந்து இணைக்கப்பட வேண்டிய தேவை தெளிவாகிறது. திறன் மேம்பாடு, தொழில்முனைவு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகள் ஆகியவை பெண்களின் பொருளாதார சுயநிறைவை வலுப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன.

எனவே வேலைவாய்ப்பின் வெற்றியை ஆண்களுக்கு வழங்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையால் மட்டும் அளவிடாமல், பெண்களின் வேலை மற்றும் தொழில்முனைவு பங்கேற்பு எவ்வாறு விரிவடைகிறது என்பதையும் மதிப்பிட வேண்டும். இது திமுகவின் சமூக நீதிப் பார்வையை வேலைவாய்ப்பு கொள்கையுடன் இணைக்கும் முக்கியமான பரிமாணமாகும்.

**சென்னையைத் தாண்டி பிற மாவட்டங்க ளுக்கும் வேலைவாய்ப்பு!**

ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி தலைநகரைச் சுற்றி மட்டும் குவிந்தால், பிராந்திய சமநிலை பாதிக்கப்படும். எனவே மாவட்டங்களுக்கு இடையே தொழில் முதலீடும் வேலைவாய்ப்பும் பரவுவது முக்கியமான அரசுக் கொள்கையாகிறது. தமிழ்நாடு அரசு 2023–2024 நிதிநிலை அறிக்கையில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சமநிலையான தொழில்மயமாக்கலை உறுதி செய்வதற்கான தனது நோக்கத்தைத் தெளிவுபடுத்தியது (Government of Tamil Nadu, 2023). இதன் பொருள், முதலீடுகளை சென்னையில் மட்டுமல்லாமல், மாவட்டங்களிலும் தொழில் சூழலை உருவாக்கும் வகையில் பரப்ப வேண்டும் என்பதாகும்.

மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் தொழில் அணுகுமுறையை மதிப்பிடும்போது புதுக்கோட்டை உள்ளிட்ட வளர்ந்து வரும் மாவட்டங்களின் தொழில் வாய்ப்புகளையும் தனியாகப் பார்க்க வேண்டும். உள்ளூர் தொழில், MSME, சேவைத் துறை மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகள் அதிகரித்தால், இளைஞர்கள் வேலை தேடி பெருநகரங்களுக்கு இடம்பெயர வேண்டிய கட்டாயம் குறையும். எனவே மாவட்ட வாரியான முதலீடு, தொழில் தொடக்கம் மற்றும் உண்மையில் உருவான வேலைவாய்ப்பு ஆகிய தரவுகள் திமுக அரசின் வேலைவாய்ப்பு செயல்பாட்டை மதிப்பிடுவதில் அடுத்த முக்கிய அளவுகோல்களாக இருக்க வேண்டும்.

**விமர்சனங்களுக்கு தரவுகளே பதில்!**

ஒரு அரசின் வேலைவாய்ப்பு சாதனையைப் பற்றி பேசும்போது பாராட்டுகளுடன் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்வதே அறிவியல் சார்ந்த அரசியல் எழுத்தின் அடிப்படை. ”வேலைவாய்ப்பு இல்லை, ”அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை, ”முதலீட்டு ஒப்பந்தங்கள் வேலைவாய்ப்பாக மாறவில்லை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு உணர்ச்சிவசப்பட்ட பதிலை விட அதிகாரப்பூர்வத் தரவுகளே வலுவான பதிலாக இருக்க முடியும்.

2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட ரூ.6,64,180 கோடி முதலீடு மற்றும் 26,90,657 வேலைவாய்ப்புகள் உறுதிமொழி அடிப்படையிலானவை. எனவே அவற்றை உடனடியாக ”உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் என்று கூறாமல், திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்த பின்னர் கிடைக்கும் உண்மையான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு தரவுகளுடன் ஒப்பிட வேண்டும் (Government of Tamil Nadu, 2024a).

இந்த அளவுகோலில் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியைப் பார்க்கும்போது, அவரது நிர்வாகத்தின் தனித்துவம் வெறும் அறிவிப்புகளின் எண்ணிக்கையில் அல்ல; அறிவிப்புகளைத் திட்டங்களாகவும், திட்டங்களை நடைமுறையாகவும், நடைமுறையை மக்களின் வாழ்க்கையில் உணரக்கூடிய மாற்றமாகவும் கொண்டு செல்லும் நிர்வாகத் தொடர்ச்சியில் வெளிப்படுகிறது.மு.க. ஸ்டாலினின் தலைமையைப் பற்றிய அரசியல் வாதமும் இதே அளவுகோலை ஏற்க வேண்டும்: அறிவிப்பு அல்ல, செயல்படுத்தல்; உறுதிமொழி அல்ல, நிறைவேற்றம்; திட்டம் அல்ல, அதன் பயன் – இவையே இறுதி அளவுகோல்கள்.

**எதிர்கால வேலைவாய்ப்பை நோக்கிய தமிழ்நாடு!**

வேலைவாய்ப்பு அரசியலின் அடுத்த கட்டம் எதிர்காலத் தொழில்நுட்பங்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, மின்னணு உற்பத்தி, மின்சார வாகனங்கள், செமிகண்டக்டர், பசுமை ஆற்றல், தரவு மையங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் போன்ற துறைகள் எதிர்கால வேலைவாய்ப்புகளின் முக்கிய ஆதாரங்களாக மாறுகின்றன.

தமிழ்நாடு அரசு 2024ஆம் ஆண்டு செமிகண்டக்டர் மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கையை வெளியிட்டு, இத்துறையில் முதலீட்டை ஈர்ப்பதுடன் திறன் வாய்ந்த மனிதவளத்தை உருவாக்கும் நோக்கத்தையும் முன்வைத்தது (Government of Tamil Nadu, 2024b). இந்தத் துறையில் 2030க்குள் 2 லட்சம் திறன் வாய்ந்த மனிதவளத்தை உருவாக்கும் இலக்கு கொள்கை விவாதங்களில் குறிப்பி டப்பட்டுள்ளது.

அரசின் வேலைவாய்ப்பு அணுகுமுறையின் என்பது, வேலை தருவது மட்டுமல்லாமல், தொழில்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை கிடைக்கத் தேவையான திறனையும் தொழில் சூழலையும் தற்போதைய அரசு உருவாக்க வேண்டியதில்லை திமுக அரசின் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தினாலே போதுமானது இதற்காக ”நான் முதல்வன் போன்ற திறன் மேம்பாட்டு அமைப்புகளும், புதிய தொழில்களுக்கான முதலீட்டு கொள்கைகளும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட வேண்டும். கல்வி–திறன்–தொழில்–வேலைவாய்ப்பு என்ற முழுச் சங்கிலி வலுப்பெறும் போதுதான் எதிர்கால வேலை வாய்ப்பு பாதுகாப்பாகும்.

மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் வேலை கொடுப்பதைத் தாண்டி, வேலை உருவாகும் சூழலை உருவாக்குவது உறுதிப்படுத்தப்பட்டது.

ஒரு அரசின் சாதனையை கடந்த கால எண்ணிக்கைகளால் மட்டும் அளவிட முடியாது. அந்தச் சாதனைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, காலத்திற்கேற்ப மேம்படுத்தப்பட்டு, அடுத்த தலைமுறையின் தேவைகளுக்கு ஏற்ப விரிவுபடுத்தப்படுகிறதா என்பதே அதன் உண்மையான வெற்றியைத் தீர்மானிக்கும்.

முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பை வெறும் அரசு பணியிடங்களின் எண்ணிக்கையாக மட்டும் அணுகாமல், கல்வி, திறன் மேம்பாடு, தொழில் முதலீடு, தொழில்முனைவு மற்றும் எதிர்காலத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அணுகுமுறையை முன்னெடுத்து வந்தது. ”நான் முதல்வன் போன்ற திட்டங்கள் கல்விக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்பட்டன (Government of Tamil Nadu, 2022).

இந்தத் திட்டங்களின் வீச்சு தற்போதும் தொடர்ந்து விரிவடைந்து, அவற்றின் தரம் மேலும் மேம்படுத்தப்பட்டால், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு கல்வியிலிருந்து திறன், திறனிலிருந்து வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பிலிருந்து தொழில்முனைவு என முன்னேறும் ஒரு தொடர்ச்சியான பாதை உருவாகும்.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவு, மின்னணுவியல், செமிகண்டக்டர், மின்சார வாகனங்கள், பசுமை ஆற்றல், உலகளாவிய திறன் மையங்கள் போன்ற புதிய துறைகளில் முதலீடுகள் தொடர்ந்து வருவதுடன், அந்தத் துறைகளுக்குத் தேவையான திறன்களும் இளைஞர்களிடம் உருவாக்கப்பட வேண்டும். தொழில் முதலீடும் திறன் மேம்பாடும் ஒன்றோடொன்று இணைந்தால்தான் முதலீட்டு அறிவிப்புகள் உண்மையான வேலைவாய்ப்புகளாக மாறும். இதனால் எதிர்கால தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு கொள்கையில் மூன்று அம்சங்கள் தொடர்ந்து வலுப்படுத்தப்பட வேண்டும்: திறன் – தொழில் – வேலைவாய்ப்பு. கல்வி நிறுவனங்களில் பெறப்படும் அறிவு தொழில்துறையின் தேவையுடன் இணைக்கப்பட வேண்டும்; தொழில் முதலீடுகள் உள்ளூர் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும்; உருவாகும் வேலைகள் எதிர்காலத் தொழில்நுட்ப மாற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.

இந்தத் தொடர்ச்சியான செயல்பாடு உறுதியாக இருந்தால், தமிழ்நாட்டின் இளைஞர்கள் வேலை தேடும் தலைமுறையாக மட்டும் இல்லாமல், வேலை உருவாக்கும் தலைமுறையாகவும் உருவெடுக்க முடியும்.

அதுவே மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் வேலைவாய்ப்பு அணுகுமுறையின் நீண்டகாலப் பயனாக அமைந்தது. திட்டங்கள் அறிவிக்கப்படுவதைக் காட்டிலும் அவை தொடர்ந்து செயல்படுத்தப்படுவதும், பயனாளிகளின் திறன் மற்றும் வேலைவாய்ப்பு நிலைமையில் ஏற்படுத்தும் மாற்றம் கண்காணிக்கப்படுவதும் முக்கியம். இறுதியில், ”என் கல்விக்கு ஏற்ற வேலை எங்கே? என்று கேட்கும் இளைஞனிடம், ”உன் திறமைக்கு ஏற்ற வாய்ப்பு தமிழ்நாட்டிலேயே இருக்கிறது என்று நம்பிக்கையுடன் கூறக்கூடிய நிலையை உருவாக்குவதே அரசின் மிகப்பெரிய வெற்றியாகும்.

திட்டங்கள் தொடரட்டும்; திறன்கள் வளரட்டும்; தொழில்கள் பெருகட்டும்; வேலைவாய்ப்புகள் உருவாகட்டும்; தமிழ்நாட்டின் இளைஞர் தலைமுறை முன்னேறட்டும்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், லெக்கம்பட்டி கிராமத்தில் திருக்கோவில் கொடை விழா மற்றும் மாவீரர் அழகு முத்துக்கோன் குருபூஜை விழாவை முன்னிட்டு,மாபெரும் மூன்றாம் ஆண்டு மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இம்மானுவேல், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முத்துராம லிங்கம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அம்பத்தூர் - புதூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள

# தனியார் ரங்கராட்டினத்தினால் போக்குவரத்துப் பாதிப்பு!

## விபத்துகள் ஏற்படும் அபாயம்!



*சென்னை, ஆக.14 -* அம்பத்தூர் தாங்கல் ஏரிப் பூங்காவுக்கு கிழக்கில் உள்ள புதூர் சாலையில் சாலையை ஆக்கிரமித்து தனியார் ரங்கராட்டினம் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் விபத்துகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அச்சாலையின் அகலத்தில் பாதிக்கு மேற்பட்ட இடத்தில் ரங்க ராட்டினத்தின் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

இங்கு விபத்துகள் ஏற்படுவதற்கு முன்பு, அரசு உரிய நடவடிக்கை எடுத்து சாலையில் நடுவில் அமைக்கப்பட்டுள்ள ரங்கராட்டினத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று பொது மக்களும் வாகன ஓட்டிகளும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் – குமாரபாளையம் தெற்கு

# நகரப் பொறுப்பாளர் ஜி.எஸ்.ஞானசேகர் மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி – ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. – கழக நிர்வாகிகள் அஞ்சலி!

நாமக்கல், ஆக.14:

குமாரபாளையம் தெற்கு நகர பொறுப்பாளராக பணியாற்றி வந்த ஜி.எஸ்.ஞானசேகர் நேற்று முன்தினம் (12.8. 2026) புதன்கிழமை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

கழகத்தில் நீண்டகாலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றிய ஜி.எஸ்.ஞானசேகர், 2004 முதல் 2009ம் ஆண்டு வரை குமாரபாளையம் நகர இளைஞரணி அமைப்பாளராக பணியாற்றினார். தொடர்ந்து, 2006 முதல் 2011ம் ஆண்டு வரை குமார பாளையம் நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.



மேலும், கழக பொறுப்புக் குழு உறுப்பினராகவும் அவர் பணியாற்றியுள்ளார். கடந்த 2023ம் ஆண்டு முதல் குமார பாளையம் தெற்கு நகர பொறுப்பாளராக இருந்து கழகப் பணிகளை மேற்கொண்டு வந்தார்.

மறைந்த ஜி.எஸ்.ஞானசேகர் உடலுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, ஈரோடு தொகுதி மக்களவை நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிர காஷ், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர் அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி நிகழ்வு நல்லடக்கம் நேற்று (13.08. 2026) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சென்னகேசவன்**
**ஆகஸ்ட் 14 (1984)**



**தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.**

**“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**